# Best wishes to all my student friends

by Narendra Modi 4. March 2010 01:00

நண்பர்களே,

இது குழந்தைகளுக்கு தேர்வுகள் நடக்கும் பருவம். மாநில அளவிலான தேர்வுகள் தொடங்கிவிட்டன. இது மாணவர்களுக்கு மட்டுமின்றி, அவர்களின் பெற்றோர்களுக்கும் மிகவும் முக்கியமான கால கட்டமாகும்.

என் நண்பர்களே, தேசத்தின் எதிர்கால தலைவர்களே, நீங்கள் 10-ஆவது மற்றும் 12-ஆவது வகுப்புகளுக்கான தேர்வுகளை தரும் தயார் நிலையில் இருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய முயற்சியில் பெரும் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்களை அளிக்கிறேன்.

நாம் பெறும் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் கடுமையான உழைப்பு, முறையான தீர்மானம், ஈடுபாடு ஆகியவை பின்புலமாக இருக்கின்றன. வாழ்க்கையாகிய பாதையில் பயணிக்கும்போதுதான், நாம் கற்றுக் கொண்டவையெல்லாம் பரிசோதிக்கப்படுகின்றன. இதன் பொருளாவது நாம் அனைவருமே ஒரு வகையில் வாழ்க்கை என்னும் பாட சாலையின் மாணவர்கள்தான்.

இங்கு நான் சுவாமி விவேகானந்தரின் போதனை வழிகளை குறிப்பிட விரும்புகிறேன் – “எழு, முயற்சி செய், நீ உன்னுடைய நோக்கத்தை அடையும்வரை நீ தளராதே”

நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக தேர்வுகள் விளங்குகின்றன. அறிவுபூர்வமான செயல்பாடுகளின் அடியில் உங்களது கவலைகளை புதைத்துவிடுங்கள். உங்கள் முயற்சிக்கான பலன் தானாகவே கிடைக்கும்.

இறுதியாக நான் என்னுடைய வெற்றியின் சூத்திரத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் – “ விருப்பம் + உறுதியாக இருத்தல் = இறுதி முடிவு. இறுதி முடிவு+ கடும் முயற்சி = வெற்றி”.

Copyright © 2009 NarendraModi.com

நமது நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலத்தை பங்களிப்பதில் உங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்று நான் உறுதியாக நம்புகிறேன். அனைத்து மாணவ நண்பர்களுக்கும் எனது மேலான வாழ்த்துகள்.

உங்களன்புள்ள,



**Copyright © 2009 NarendraModi.com**